பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 27 | வெள்ளிக்கிழமை | 12.01.2024 | கதிர் 427

# அரச கப்பலில், அரச நிதியில் மகிந்த நடுக்கடலில் ‘பார்ட்டி’

## நாடாளுமன்றத்தில் சஜித் போட்டுடைப்பு

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்சஉள்ளிட்டஅரசதரப்புஉறுப்பினர்கள்சிலர் அரசுக்குச்சொந்தமானகப்பல்களைப்பயன்படுத்திக்கொண்டு நடுக்கடலில் விருந்துபசாரம் மேற்கொண்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில்,

அரச தரப்பு உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்தலைமைப் பதவிக்குத் தேர்தல் நடப்பது உறுதியாகிவிட்டது. வேட்பாளர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன் மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோருக்கு இடையில் நேற்று நடந்த சந்திப்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. மூன்று வேட்பாளர்களும் இணைந்து அவர்களில் ஒருவரைத் தலைவராக, ஏகமனதாகத் தெரிவு செய்யமுடியாமையினால் திட்டமிட்டபடி ஜனவரி 21 தலைமைப் பதவிக்கான தேர்தல் நடக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

முன்னதாக, புதன்கிழமை கொழும்பில் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தனின் வீட்டில் இடம்பெற்றகட்சியின்அரசியல் ☞ 2

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் - நல்லூர் சட்டநாதர் கோவில் பகுதியில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

ஜெகநாதன் என்ற 61 வயதானவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

அவர் உயிரிழந்து சில தினங்களாகி இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலுக்கமைய சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூறாய்வுகளுக்காக ☞ 2

# மன்றில் சஜித் எழுப்பிய கேள்விக்கு ஆளும் ரதப்பில் சரியான பதிலில்லை

அரசுக்குச் சொந்தமான சொகுசுக்கப்பலில் மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசதரப்பு உறுப்பினர்கள் சிலர் நடுக்கடலில் விருந்துபசாரத்தில் ஈடுபட்டமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அதற்கு வேறு வேறு விடயங்கள் பற்றிப் பேசிய ஆளும் தரப்பினர் நேரடியாகப் பதிலளிக்காமல் மழுப்பினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து, நாடு வங்குரோத்து அடைந்துள்ளநிலையில்மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரச தரப்பு உறுப்பினர்கள் சிலர் அரசுக்கு சொந்தமான கப்பல்களை பயன்படுத்திக்கொண்டு நடுக்கடலில் விருந்துபசாரம் மேற்கொண்டுள்ளனர். இதுதொடர்பாக அரசு பதிலளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த ஆளும் கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தெரிவிக்கையில், அரசியல்இலாபத்துக்கான மதிப்பெண்களைப் போட்டுக்கொள்வதற்காக அவசியமற்ற கேள்விகளை கேட்டு நேரத்தை வீணடிக்க வேண்டாம். அவ்வாறு கேள்வி கேட்க வேண்டும் என்றால், பிரத்தியேகமாக கேள்வி கேட்டால் ☞ 2

# பின்கதவால் ஜனாதிபதியானவரே நடுக்கடல் ‘பார்ட்டி’க்கு காரணம்

## கஜேந்திரன் சபையில் சாடல்

மகிந்த தலைமையிலான மொட்டுக் கட்சியினர் நடுக்கடலில் விருந்து கொண்டாடுமளவுக்கு சுதந்திரமான நிலைமைகளை பின்கதவால் வந்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவே ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மக்கள் புரட்சிஏற்பட்டதால்ராஜபக்சக்களும், அவர்களது குடும்பத்தினரும், மொட்டுக்கட்சியினரும் பதுங்கி வாழும் நிலைமை உருவாகியிருந்தனர். எனினும், பின்கதவால் வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது ராஜபக்ச குடும்பமும், மொட்டுக்கட்சியினரும் நடுக்கடலில் விருந்துபசாரத்தினைக் கொண்டாடுமள ☞ 2

# மகிந்த நடுக்கடலுக்குச் சென்றது கண்காணிப்புப் பயணமாகவாம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த நடுக்கடல் ’பாட்டி’ குற்றச்சாட்டில் உண்மையில்லை என்றும் கண்காணிப்புப் பயணமாகவே மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்கள் கடலுக்குப் பயணித்தனர் என்றும் இராஜாங்க அமைச்சர் பிரேம்லால் ஜயசேர தெரிவித்தார். அவர் செய்தியாளர்களிடம் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நாம் களியாட்ட விருந்துக்காக அங்கு செல்லவில்லை. கண்காணிப்புக்காகத்தான் சென்றோம். இந்த நிலையில் குறித்த கப்பல்கள் சென்ற விதம், அவை எங்கே சென்றன என்பது தொடர்பில் என்னால் விவரிக்க முடியும்.

அதுமட்டுமன்றி, குறித்த பயணத்துக்கான மொத்த செலவீனத்தினையும் நானே ஏற்றுள்ளேன். மேலும் எரிபொருளுக்கான செலவீனம் செய்யப்படவில்லை. சட்டத்துக்கு அமைவாக கண்காணிப்புப் பயணத்துக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்ல முடியும்.

குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் நான் எரிபொருள் செலவினையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே உள்ளோம். நாம் சுற்றுலா செல்வதாக இருந்தால் அல்லது களியாட்ட விருந்துக்காகச் செல்வதாக இருந்தால் மண் ஏற்றிச் செல்லும் படகில் எதற்காகச் செல்ல வேண்டும். வேறுவழிகளில் நாம் சென்றிருக்க முடியும் என்றார்.

# அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் இரத்தினக்கல் ஏற்றுமதி அதிகரிப்பு

## தனது திட்டம் என்கிறார் ஜனாதிபதி

எதிர்வரும் இரண்டு வருடங்களில் இலங்கையில் இரத்தினக்கல் துறையில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் அதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சீனங்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்திருந்த ’ஜெம் சிறீலங்கா (Gem Sri Lanka) 2024’ இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியின் ஆரம்பநிகழ்வில் நேற்றுக் காலை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பேருவளை பிரதேசம் இலங்கையில் இரத்தினக்கற்களின் மையமாக உள்ளது. மேலும் பேருவளை அதற்குப் புகழ் பெற்றது. இரத்தினக்கல் தொழிற்துறையின் அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

கடந்த வரவு செலவுத் திட்ட உரையிலும் இரத்தினக்கல் தொழிலுக்கான கொள்கை கட்டமைப்பை தயாரிப்பது பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அடுத்த இரண்டு மாதங்களில், அந்த கொள்கை கட்டமைப்பைதயாரிக்கும் பணிமேற்கொள்ளப்படும். அதற்கேற்ப இந்த நாட்டின் இரத்தினக்கல் தொழில்துறை பெரும் அபிவிருத்தியை நோக்கி முன்னேறும்.

இலங்கையில் உள்ள இரத்தினக்கல் தொடர்பில் அதிக வாய்ப்புகள் உள்ளன. இயன் ஃப்ளெமிங் ஒருமுறை ’வைரங்கள் நிரந்தரமானவை’ என்று கூறியிருந்தார். வைரங்கள் மட்டுமல்ல, இலங்கையின் இரத்தினங்களும் நிரந்தரமானவை. இலங்கை நீலக்கல்லுக்கும் நீண்ட வரலாறு உள்ளது. ☞ 10

# பிரி. இளவரசி - ஜனாதிபதி கொழும்பு கோட்டையில் சந்திப்பு



இலங்கைக்கு மூன்றுநாள் பயணமாக மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய ஆன் இளவரசி மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைசந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த ☞ 2

# சகல முன்பள்ளிகளுக்கும் இனிமேல் காலை உணவு

## இராஜாங்க அமைச்சர் கீதா அறிவிப்பு

நாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமென மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ☞ 8

# அரசுக்கு கால அவகாசம் தாதியர் சங்கம் அறிவிப்பு

அரசு நியாயமான முடிவினை அறிவிப்பதற்கு கால அவகாசம் வழங்குவதாக அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தொட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதாரத் ☞ 2

# வைத்தியர்களுக்கு மட்டும் சம்பள உயர்வா? சுகாதார தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

வைத்தியர்களுக்கு மட்டும் சம்பள அதிகரிப்பைச் செய்தமைக்கு எதிராக ஒன்றிணைந்த சுகாதார தொழிற் சங்கங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

நிறைவுகாண் மருத்துவ தொழில்வல்லுநர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரவிகுமுதேஷ் தெரிவிக்கையில்,

வைத்தியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியமை தொடர்பில் எமக்குப் பிரச்சினைகள் எதுவுமில்லை. அவர்களின் ☞ 10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

குழுக் கூட்டத்தில், தலைமைப் பதவிக்குப் போட்டியின்றி ஒருவர் தெ-ரிவு செய்யப்படவேண்டும், அதுவே கட்சியின் பாரம்பரியம் என்று சம்பந்தர் உட்படப் பல உறுப்பினர்களால் வலியுறுத் தப்பட்டது. அதனை அடுத்து இந்த விடயத்தில் வேட்பாளர்கள் மூவரும் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாஎன்பதைப்பார்ப்பதற்குத் தமக்கு ஒரு நாள் கால அவகாசம் தருமாறு அந்தக் கூட்டத்திலேயே நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் கேட்டிருந்தார். அதற்கு அரசியல் குழு அனுமதி வழங்கியிருந்தது.

வேட்பாளர்களின் முடிவு என்னவாக இருந்தபோதும் திட்டமிட்டபடி ஜனவரி 21 கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவது என்றும் தொடர்ந்து ஜனவரி 27,28 கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவது என்றும் கூட்டத்தில்முடிவெடுக்கப்பட்டிருந்தது. கூட்டத்தின் முடிவுப்படி தலைமைப் பதவிக்கான வேட்பாளர்கள் மூவரும் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் மாதிவெல உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர். யோகேஸ்வரனும் அங்கேயே இருக்கிறார் என்பதால் சுமந்திரன் மட்டும் அங்கு சென்றிருந்தார். சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. முடிவில் அவர்களில்ஒருவரைத்தலைவராகத் தெரிவு செய்வதற்கான இணக்கம் எட்டப்படவில்லை.

யோகேஸ்வரன் ஏற்கனவே தனது ஆதரவு சிறீதரனுக்குத்தான் என்று அறிவித்துவிட்டதை அடுத்து பேச்சு சுமந்திரன் மற்றும் சிறீதரனுக்கு இடையில் மட்டுமே நடந்தது. கட்சியின் ஆலோசனைப்படி இந்த விடயத்தில் உண்மையான அக்கறையோடு என்ன செய்யமுடியும் என்று ஆராயலாம் என சுமந்திரன் தொடங்கினார். நீங்கள் ஏன் இப்போது தலைவராக வேண்டும் என்று விரும்புகிறீர்கள், கொஞ்சக் காலம் கழித்தும் தலைவராகலாமே என்றார் சிறீதரன். அதற்கு, 2010ஆம் ஆண்டு முதல் கட்சியின் அனைத்து அரசியல் நடவடிக்கைகளிலும் தான் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தேன் என்றும், குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நான்கு கட்சிகளின் தலைவர்களுடன்ஐந்தாவது ஆளாக, கட்சித் தலைவராக இல்லாமலேயே தானும் கலந்துகொண்டு முக்கிய பங்காற்றி வந்துள்ளார் என்றும் தெரிவித்த சுமந்திரன், அப்படி தமிழர்களின் அரசியல் நகர்வுகள், போக்குகள், தீர்வு முயற்சிகள் என்று எல்லாவற்றிலும் தனது பங்களிப்புத் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதைச்சுட்டிக்காட்டினார். எனவே கட்சித்தலைவராகுவதன்மூலம்தான் தொடர்ந்தும் அந்த முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்பதே தலைமைப் பதவியைத் தனக்குக்கோருவதற்கான காரணம் என்றார்.

சிறீதரன் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. முதல் இரு ஆண்டுகளுக்கும் தனக்குத் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்கும்படி கேட்டார். ஆனால், இதில் விட்டுக்கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்று சுமந்திரன் மறுத்துவிட்டார். அத்தோடு தான் தலைமைப் பதவியில் இன்னும் சிறிது காலம் மட்டுமே இருப்பேன் என்றும் அதன் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவேன் என்றும் அதனால் இப்போது தான் தலைவராகுவதே பொருத்தமானது என்றும் தெரிவித்தார்.

இப்படி இருவருக்கு இடையிலும் இணக்கம் ஏற்படாத நிலையில் ஜனவரி 21 போட்டியைச் சந்திப்பது என்று முடிவாகி இருக்கின்றது. இருந்தாலும் பொதுக் கூட்டத்தைத் தடுப்பதற்கான தனது இறுதிநேர முயற்சிகளில்கட்சித்தலைவர்மாவை சோ.சேனாதிராசா தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார் என்று அறிய முடிகின்றது. ஜனவரி 21 பொதுக் கூட்டத்திற்கு இடையில் கட்சியின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டுமாறு அவர் பதில் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது. எனினும் மத்திய குழுவை இன்னும் 9 நாட்களுக்குள் அவசரமாகக் கூட்டுவதற்கான வாய்ப்புக்கள் சாத்தியமாகும் போன்று தெரியவில்லை. வவுனியாவில் இறுதியாகக் கூடிய மத்திய குழுக் கூட்டத்தில்தான் ஜனவரி 21 மற்றும் 27,28 ஆகிய திகதிகளில் பொதுக் குழுக் கூட்டம் மற்றும் கட்சியின் தேசிய மாநாடு ஆகியவற்றை நடத்துவது என்று இறுதி செய்யப்பட்டது.

அப்படியிருந்தும் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டி பொதுக் குழுக் கூட்டத்தை நிறுத்த அல்லது கட்சிக்குள் தலைமைப் போட்டியை நிறுத்த மாவையர் தொடர்ந்தும் போராடி வருகிறார். திரைப்படக் 'கிளைமாக்ஸ்' மாதிரி அடுத்துவரும் நாட்களில் என்னென்ன அரசியல் நகர்வுகள் இடம்பெறுகின்றனர் என்று பார்க்கலாம்....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் துறைமுக அதிகார சபைக்குசொந்தமான'ஹன்ஸகாவா' மற்றும் தியகூலா ஆகிய 2 கப்பல்களைபயன்படுத்திக்கொண்டு கடந்த இரு நாட்களுக்கு முன்பு கடல் நடுவில் விருந்துபசாரக் கொண்டாட்டமொன்றைநடத்தியுள் ளனர். இதற்குதுறைமுகஇராஜாங்க அமைச்சர்எழுத்துமூலஅனுமதியும் வழங்கியுள்ளார்.

நாடு வங்குரோத்தாகி உள்ள இவ்வேளையில், அரச நிதியை பயன்படுத்திக்கொண்டு, அரசுக்கு சொந்தமான கப்பல்களை பயன்படுத்திக்கொண்டு அரசின் ளிபொருள்செலவிட்டுஎவ்வாறுகடல் நடுவில்விருந்துபசாரம்மேற்கொள்ள முடியும்? துறைமுகத்தில் உள்ள உணவகத்தில் இருந்து உணவு, குடிபான வகைகளைகூட இந்த விருந்துக்காகப் பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளன.

நான் தெரிவிக்கும் இந்த விடயம் உண்மை. ஆளும் தரப்பு சவால் விடுமாக இருந்தால், இதுதொடர்பான புகைப்படங்களை சபைக்கு சமர்ப்பிக்கவும் தயாராக இருக்கிறேன். வங்குரோத்து அடைந்துள்ள நாட்டில் இவ்வாறு செயற்பட முடியுமா?

அமைச்சர்களின் தனிப்பட்ட செலவில்இந்தவிருந்துபசாரங்களை நடத்துவது பிரச்சினையல்ல. என்றாலும்,அரச வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறான விருந்துபசாரங்கள் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதது.

அத்துடன்இந்த2கப்பல்களிலும் இவர்கள் ஏறுவதற்காக சிவப்பு கம்பளம்கூட விரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் பணத்தை செலவு செய்து விருந்து வைப்பது தொடர்பில்தான்எமக்குஆட்சேபனை இருக்கிறது.

நாட்டு மக்கள் இதனை தெரிந்துகொள்ள வேண்டும். இது பெரும் குற்றச்செயலாகும். இது தொடர்பில் ஆளும் தரப்பு பதிலளிக்கவேண்டும் என்றார்.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையினரின் பிரச்சினையானது பாரதூரமானதாகும். இந்தப் பிரச்சினைக்கு அரசு நியாயமான தீர்வொன்றை வழங்க வேண்டும். அதற்காக நாம் எதிர்வரும் 16ஆம் திகதிவரையில்காலஅவகாசத்தினை வழங்குகின்றோம்.

அரசும், பொறுப்பு வாய்ந்த அமைச்சரவையும் உரிய தீர்மானத்தினை எடுப்பதற்கு தவறும் பட்;சத்தில் கடுமையான தொழிற்சங்கப் போராட்டத்துக்குச் செல்வோம் என்பதை நாம் உறுதியாக தெரிவிக்கின்றோம் என்றார்.

## பின்கதவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்குசுதந்திரமானநிலைமைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

நாட்டைக் கொள்ளையடித்துக் குட்டிச்சுவாராக்கியவர்களில் ராஜபக்சக்களுக்கும் அவர்களது சகாக்களுக்கும் பெரும்பங்குண்டு. உயர் நீதிமன்றமே நாட்டின் பொருளாதார சீர்குலைவுக்கு மகிந்த உள்ளிட்டவர்கள் பொறுப்புக்கூற வேண்டுமென என்று அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில், தற்போது அவர்கள் சுதந்திரமாக விருந்துண்டு களித்து மகிழ்வதற்கு ரணில் வழிசமைத்துள்ளார். இது தான் இந்த நாட்டின் நிலைமை என்பதைபுரிந்துகொள்ளவேண்டும் என்றார்.

## சடலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டது.

இறப்புக்கான காணரம் குறத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்துக்குபொறுப்பானஅமைச்சர் அதற்கு பதில் வழங்குவார் என்றார்.

நான் மக்களுக்காகவே இந்த விடயத்தை முன்வைத்தேன். எனது தனிப்பட்ட எந்த விடயத்தையும் முன்வைக்கவில்லை. அதனால் மக்களின் பணத்தில் நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தியமை தொடர்பில் ஆளும் தரப்பு பதில் சொல்லவேண்டும் என்றார் சஜித்.

அதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் எமக்கும் கருத்து தெரிவிக்கமுடியும். உங்கள்சகோதரி திருட்டு பணம் மாற்றியபோது, அந்த சம்பவத்தில் இருந்து அவரை பாதுகாத்தது, மஹிந்த ராஜபக்ஷ என்பதை மறந்துவிட வேண்டாம். அதுபொருளாதாரத்துக்குபாதிப்பான விடயம். அதேபோன்று உங்கள் தந்தை தான் புலிகளுக்கு ஆயுதம் வழங்கி இருந்தார். இதுபோன்று எங்களுக்கும் தெரிவிக்க முடியும் என்றார்.

அதற்கு சஜித் பிரேமதாச, புலிகளுக்கு பணம் வழங்கியது யார் என்பது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். யார் பணம் வழங்கியது. யாருடைய பணத்தை வழங்கியது என்பதை தெரிந்துகொள்ளலாம். அத்துடக் நானோ எனது குடும்பத்தில் வேறு யாருமோ திருட்டுப்பணம் மாற்றியதில்லை.

இவ்வாறு பொய்ப் பரப்புரை மேற்கொள்ள வேண்டாம். அதனை நான் பொறுப்புடனே தெரிவிக்கிறேன், அதனால் துறைமுகத்துக்கு சொந்தமான கப்பலை பயன்படுத்திக்கொண்டு எவ்வாறு விருந்துபசாரம் நடத்த முடியும் என்பது தொடர்பில் பதிவளிக்க வேண்டும் என்றார்.

இதன்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, வேண்டாதவிடயங்களைசபையில் வெளிப்படுத்தி நேரத்தினை வீணடிக்காதீர்கள் என்றார்.

அச்சமயத்தில் சஜித் பிரே மதச, எனது வாயை மூடி விடயத் தினை மறைக்க முடியாது. இது தொடர்பில் உண்மைகள் வெளிப் படுத்தப்படவேண்டும் என்றார்.

## பிரி. இளவரசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளவரசிஆன்உள்ளிட்டபிரித்தானிய தூதுக்குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இளவரசி ஆன் உள்ளிட்ட தூதுக்குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்கவுடன்சிநேகபூர்வமாக கலந்துரையாடினர்.

இந்நிகழ்வை நினைவுக்கூறும் விதமாக ஜனாதிபதி மாளிகை யிலிருக்கும்விருந்தினர்பதிவேட்டில் இளவரசி ஆன் நினைவுக் குறிப் பொன்றை பதிந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டுஅலுவல்கள்அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.




# நாட்டின் வங்குரோத்துக்கு காரணமானோர் மீது இதுவரைக்கும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## சஜித் போட்டுத் தாக்கு



நாட்டைவங்குரோத்தாகுவதற்கு காரணமானவர்கள் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து 2 மாதங்கள் கடந்தும் அவர்களுக்கு எதிராக ஜனாதிபதியோ அரசாங்கமோ எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறி இருக்கிறது. அதனால் அவர்களுக்கு எதிராக எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன எனக் கேட்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27 2 இன் கீழ் கேள்வி எழுப்பி உரைய-ாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டை பாரிய பொருளாதார வீழ்ச்சிக்குக் கொண்டு சென்றவர்கள் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, அஜித் நிவார்ட் கப்ரால், எஸ்.ஆர்.ஆர்டிகல, டபிள்யூ.டி.லக்ஷ்மன், பி.பி. ஜயசுந்தர மற்றும் சமந்த குமாரசிங்க ஆகியோரைப் பெயர் குறிப்பிட்டு உயர்நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கி இருந்தது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துள்ள போதிலும், இந்தப் பொருளாதாரக் கொலையாளிகளுக்கு எதிராக ஜனாதிபதியோ அரசாங்கமோ எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை .

ஆனால் உயர் நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் அரசாங்கம் கையாளப்போகும் விதம் தொடர்பாக எதிர்க்கட்சி போன்றே 220 லட்சம் மக்களும் பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இவர்களுக்கு எதிராக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து,விசாரணைகளை மேற் கொண்டு, தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கமும் ஏன் உத்தேசிக்கவில்லை எனக் கேட்கிறோம். நாட்டை வங்குரோத்தடையச் செய்ததன் மூலம் குறித்த நபர்கள் தனிப்பட்ட நலன்களைப் பெற்றுள்ளார்களா என்பது பிரச்சினைக்குரிய விடயம். அதனால் இது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் அவர்களது குடியுரிமை தொடர்ந்து இருக்க வேண்டுமா?

56 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டு நாட்டுக்கு நஷ்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தற்போதைய நீதி அமைச்சர் கூடத் தெரிவித்துள்ளார். இந்தப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியுமென்றால் வற்வரியை அதிகரிக்க வேண்டிய ஏற்பட்டிருக்காது.

அத்துடன் நனோ உர மோசடியாலும் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மூலம் பொருளாதாரத்திற்கு சேதம் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் என்ன? சேதன உர மோசடி காரணமாக நாட்டுக்கு 711.8 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அனுபவமற்ற இந்நிறுவனம் கொள்முதல் வழிகாட்டுதல்களை விதிமுறைகளைக் கூட மீறியுள்ளது.

விநியோகஸ்தருக்கு 711 மில்லியன் ரூபாவை அவ்வேளையிலேயே பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது, அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முன்னரோ அல்லது அங்கீகாரம் கிடைத்த அன்றோ உரங்களை விமானத்தில் ஏற்றிக்கொண்டு வரப்படுவது வழக்கத்திற்கு மாறான அதிசயமானதொரு விடயம். உரத் தொகையைப் பகுதி பகுதியாக இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டு இருந்தும், மொத்த பங்குகளின் மதிப்புக்காக ஒரு கடன் பத்திரத்தைத் திறந்ததன் காரணமாக 99 லட்சம் தேவையற்ற செலவுகளை அரசாங்கம் சுமக்க நேரிட்டுள்ளது.

அத்துடன் எரிவாயு மோசடியால் ஏற்பட்ட இழப்பு இதைவிடவும் அதிகமாகும். சியாம் கேஸ் டிரேடிங் பிரைவேட் லிமிடெட் குறைந்த விலையில் எரிவாயுவை வழங்க ஒப்புக்கொண்டாலும்,குறிப்பிட்ட நிறுவனத்தின் கோரிக்கையை அனுமதிக்காமல்,அதே நிபந்தனைகளின் கீழ் ஒகியு டிரேடிங் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து அதிக விலைக்கு கொள்வனவு செய்ததால், 1138 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நாடு வங்குரோத்தாகக் காரணமானவர்கள் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தவர்களில் சிலர் இன்னும் அரசாங்கத்தில் இருக்கின்றனர். ஏன் அவர்களை அரசாங்கத்தில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதன் ஊடாக,முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகள் சிலருக்கு நட்டஈடு செலுத்த நேரிட்டிருக்கிறது.

இதன் பிரகாரம், நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் யார் என்பதை வெளிக்கொணர்ந்த தீர்ப்பின் மூலம் நாட்டின் 220 லட்சம் மக்கள் இழப்பீடு கோரி வழக்குத் தொடரலாம். அதனால் இவர்களுக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். - என்றார். (05)

# மாற்றுக்கருத்துடையவர்களை அடக்கவே வருகிறது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## விஜித்த ஹேரத் தெரிவிப்பு



பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் எப்போதும் மாற்று கருத்துடைய அரசியல்வாதிகளை அடக்குவதற்கே பயன்படுத்தி இருக்கிறது. அதனால்தான் இந்தச் சட்டம் தொடர்பில் மக்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டமூலத்தில் பயங்கரமான பல விடயங்கள் இருக்கின்றன என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீதிமன்ற நிய-ாயசபை மற்றும் நீதிமன்ற அவமதிப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். அதனால் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். அதன்போது அவர்களுக்கு எதிராகப் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். அரசாங்கத்திற்கு எதனையாவது செய்யுமாறு கூறினாலோ, செய்ய வேண்டாமென்று கூறினாலோ பயங்கரவாதியென்று கூறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் இருக்கிறது. ஆனால் எமது நாட்டில் மாற்று கருத்துடையவர்களை அடக்குவதற்கே இந்த சட்டம் பயன்படுத்தப்படுகிறது. கவிதை எழுதியதற்காக இளைஞர் ஒருவர் பலவருடங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அதேபோன்று அனைத்து பல்கலைக்கழக சங்கத்தின் தலைவர் இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் 1983இல் ஜே.வி.பியினரைத்; தடை செய்தனர். ஆனால் ஜனநாயக ரீதியில் அரசியல் செய்கின்றோம். வடக்கில் பிரச்சினைகள் ஏற்பட்டது ஏன்? தவறான தீர்மானங்களே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தூண்டியது. மக்கள் வீதிக்கு இறங்கும் போது அவர்களை ஒடுக்க இதனைப் பயன்படுத்தவே முயற்சிக்கின்றனர். அதனால் எமது நாட்டில் தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தில் உண்மையான பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்துவதில்லை. மாறாக மாற்றுக் கருத்துடைய அரசியல்வாதிகளை அடக்கு-வதற்கே பயன்படுத்துகின்றனர். அதனால்தான் இந்த சட்டம் தொடர்பில் மக்கள் மத்;தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் கடந்த வருடம் கொண்டுவந்தது. ஆனால், அப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்றுக்கொண்டிருந்ததால் அதனை அரசாங்கம் அன்று வாபஸ் பெற்றுக்கொண்டது. தற்போது மீண்டும் இந்தச்; சட்ட மூலத்தை சமர்ப்பித்திருக்கிறது. இந்த சட்ட-மூலத்தில் இருக்கும் விடயங்கள் பயங்கரமானவை. அரசாங்கம் இந்தச் சட்டத்தை எப்போதும் தனது எதிர்த் தரப்பினரை அடக்குவதற்கே பயன்படுத்தி வந்திருக்கிறது. எதர்காலத்திலும் அதனையே மேற்கொள்ளப்போகிறது. வரலாற்றில் இதற்கான அனுபங்கள் உள்ளன. - என்றார். (05)

# தமிழக அயலக தமிழர் விழா 11, 12 ஆம் திகதிகளில் செந்தில், மனோ, செல்வம், சாணக்கியன் பங்கேற்பு

*தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில், சென்னையில் 11,12 ஆம் திகதிகளில் நடைபெறும் அயலக தமிழர் விழாவில், பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து முக்கிய தமிழ் அரசியல்வாதிகள் பயணமாகியுள்ளனர்.*

*அதனடிப்படையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், மற்றும் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் சென்னை நோக்கி பயணமாகியுள்ளனர்.*

*இதேவேளை, கனடாவின் ஒன்றாரியோ மாகாண சபையின் மார்க்கம்- தோர்ன்ஹில் தொகுதி உறுப்பினருமான லோகன்கணபதியும் குறித்த நிகழ்வில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ளார்.*

*மூன்றாவது தடவையாக முன்னெடுக்கப்படும் இவ்விழாவை தமிழக அரசானது, தமிழக எல்லையைத் தாண்டி, பரந்துபட்டு சர்வதேசங்களிலும் வசிக்கும் தமிழர்களை ஒன்று சேர்க்கும் வகையில் கொண்டாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)*

# தமிழரசு கட்சியின் வருடாந்த மாநாடு திட்டமிட்டபடி 27, 28இல் நடைபெறும்

## அடித்துக் கூறுகிறார் பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம்



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வருடாந்த மாநாடு திட்டமிட்டபடி எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேநேரம், கட்சித்தலைமைக்கு போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ-தரனுக்கும், கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கும்இடையிலான சந்திப்பின்போது, சம்பிரதாயத்துக்கு அமைவாக போட்டியின்றி தலைமைத்தெரிவு நடைபெறவேண்டுமெனசம்பந்தனால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருகோணமலை மாவட்ட கிளைத்தெரிவின்போது பாரபட்சம் காண்பிக்கப்பட்டுள்ளமையால் அனைத்து தெரிவுகளும் மீள நடத்தப்பட வேண்டுமென அம் மாவட்டத்தைச் சேர்ந்த கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவாகளான பத்துப்பேரின் கையொப்பத்துடன் தலைவர் மற்றும் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுமா இல்லையா என்பது தொடர்பில் எவ்விதமான அறிவிப்புக்களும் விடுக்கப்படவில்லை என்று அக்கடிதத்தினை அனுப்பிய அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில்,மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும் என்ற கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியசெயற்குழுக்கூட்டம் 2023ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் நாள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட தீர்மானப்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27, 28 ஆம் நாள்களில் திருகோணமலை உப்புவெளி ஜேகப் பீச் றிசோட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் தலைமையில் நடைபெறும் மேற்படி மாநாட்டுக் கூட்டம் மு.ப.10 மணிக்குத் தொடங்கி நடைபெறவுள்ளது என்றுள்ளது.

இதேவேளை, சம்பந்தனுக்கும், சிறீதரனுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பின்போது, சம்பந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் போட்டி இல்லாத தலைவர் தெரிவு நடைபெற வேண்டியதோடு சகல உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் சேர்ந்த மாநாடும் நடைபெற வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி எவ்வாறு பலமாக இருந்ததோ அதேபோன்ற நிலைமை தொடர வேண்டும். நாம் தொடர்ந்தும் பலத்துடன் இருக்க வேண்டும். கட்சிக்குள் போட்டிகள் வந்தால் அது கட்சியையும், உறுப்பினர்களையும் பலவீனப்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் தமிழரசுக்கட்சியின் கிளைத்தெரிவின்போது பாரபட்சமான நிலைமைகள் இடம்பெற்றுள்ளதை முழுமையாக வெளிப்படுத்தி மாவட்டக்கிளைத் தெரிவு மீண்டும் புதிதாக நடத்தப்பட வேண்டும் என்றும், அந்தத் தெரிவு சுயாதீன குழுவின் முன்னால் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கட்சியின் பத்து சிரேஷ்ட அங்கத்தவர்கள் மாவை சோ.சேனாதிராஜாவுக்கும், பதில் பொதுச்செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதம் சம்பந்தமாக இதுவரையில் எவ்விதமான பதில்களும் வழங்கப்படவில்லை என்று அந்த உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரச நிதி வீணடிப்பு குறித்த நீதியான விசாரணை வேண்டும்

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆட்சியாளர்களும் ஆளும் தரப்பினரும் தமது செலவினங்களைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதில்லை என்கிற குற்றச்சாட்டு நீண்ட நாள்களாகவே இருந்து வருகின்றது. இலங்கை பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்ததை அடுத்து, அதிலிருந்து மீண்டு வருவதற்கான முதன்மை வழிகளாக அரசின் வருமானத்தை அதிகரிப்பது மற்றும் அரசின் செலவினங்களைக் குறைப்பது ஆகியனவே தெரிவுகளாக இருந்தன.

அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவே வரிகள் அதிகரிக்கப்பட்டன. அது மக்கள் மீது பெரும் சுமையாக அழுத்துகின்றது. மறுபுறத்தில் அரசின் செலவுகளைக் குறைப்பதற்கு அரச ஊழியர்களின் செலவுகள் மீதே ஆளும் தரப்பு கை வைத்தது. அரச ஊழியர்களின் நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. அவர்களுக்கு சம்பளமற்ற 5 வருட விடுப்பு வழங்கப்பட்டது. அரச வங்கிகள் உட்பட அலுவலகங்களின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கி அரச அலுவலகச் செலவுகளைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருந்தாலும் அதன் மூலம் குறைக்க முடிந்த அரச செலவினம் என்பது மிகக் குறைவானதே. ஏனெனில் ஆளும் தரப்பினரான ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் ஆகியோருக்கான செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாக ஆளும் தரப்பினரின் 'பந்தா' கொஞ்சம்கூடக் குறையவில்லை. அவர்கள் தொடர்ந்தும் சுகபோக அரசியலையே நடத்தி வந்தனர். அவர்களின் பாதுகாப்பு முதற்கொண்டு உதவியாளர்கள், வாகனத் தொடரணிகள், பயணங்கள் என்று எக்கச்சக்கமான செலவுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது வெளிநாட்டுப் பயணங்களின் போதெல்லாம் அந்தப் பயணங்களுக்கு அவசியமே இல்லாத பலரையும் கூடவே அழைத்துச் சென்று அரச பணத்தை வீணடித்துக்கொண்டிருக்கின்றார். பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் இருந்த எந்தவொரு அரச தலைவருக்கும் கிடைக்கப்பெற்ற வசதிகளில் சிறிதளவேனும் குறைவில்லாது தற்போதைய அரசுத் தலைவரும் அனுபவித்து வருகின்றார். இப்படி ஆளும் தரப்பின் செலவினங்கள் நெருக்கடிக் காலகட்டத்திலும் குறைக்கப்படாததன் விளைவுகளின் பாரத்தையும் மக்களே சுமக்க வேண்டியவர்களா இருக்கின்றார்கள்.

இந்த நிலையில்தான் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரச கப்பல் மற்றும் அரச நிதியைப் பயன்படுத்திக்கொண்டு நடுக்கடலுக்குச் சென்று விருந்துக் களியாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார். அதில் உண்மை இருக்குமாயின் அது மிகப் பாரதூரமானது. எதிர்க் கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுக்கு சபையில் நேரடியாகப் பதிலளிக்காமல் ஆளும் தரப்பு நழுவியிருக்கின்றது. அதேநேரத்தில் சபைக்கு வெளியே இது குறித்துப் பேசிய இராஜாங்க அமைச்சர் பிரேம்லால் ஜயசேகர, கண்காணிப்புப் பயணம் ஒன்றுக்காகவே மகிந்த உள்ளிட்டவர்கள் கடலுக்குச் சென்றார்கள் என்று தெரிவித்துள்ளார். அதற்கான மொத்தச் செலவினமும் தன்னுடையதே என்றும் அவர் கூறியுள்ளார்.

முதலில் இந்தத் தள்ளாத வயதில் மகிந்த ராஜபக்ச நடுக்கடலுக்குச் சென்று என்ன ஆய்வில் ஈடுபட்டார் என்பதை ஆளும் தரப்பு விளக்கவேண்டும். இரண்டாவதாக இது கண்காணிப்புப் பயணம் என்றால், அரசின் செயற்பாடு என்றால் அதற்கான மொத்தச் செலவையும் இராஜாங்க அமைச்சர் ஏன் செலுத்தினார் என்பதையும் ஆளும் தரப்பு தெளிவுபடுத்தவேண்டும்.


இன்றைய நெருக்கடிக் கால கட்டத்திலும் அரசு இப்படி ஊதாரித்தனமாக மக்கள் பணத்தை வீணடிப்பது குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டு பாரதூரமானது என்பதால் இது குறித்து ஆளும் தரப்பு நேர்மையான நீதியான விசாரணை நடத்தவேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைமையில் பக்கச்சார்பற்ற குழு மூலமாக இந்த விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொணரப்படவேண்டும்.

# யானை தன் தலையிலேயே...



என் சத்திய மூர்த்தி

நாட்டில் மக்கள் தொகை குறைந்து கொண்டே போகிறது என்று கொழும்பு பல்கலைகழக பேராசிரியர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். இருபத்தைந்து சதவீதம் அளவிற்கு பிறப்புகள் குறைந்துள்ளமை இதற்கொரு முக்கிய காரணம் என்று மானுடவியல் பேராசிரியர் இந்திரலால்



டிசில்வா ஆராய்ந்து கண்டறிந்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்களுக்கு இடையே-யான இடைவெளி மிகக் குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் அன்றாட தாக்கம்தான் என்ன? இடைப் பட்ட காலத்தில், இதன் விளைவுகள் தெளிவாகத் தெரிய வில்லை ஆனால், எதிர்காலத்தில் இதன் காரணமாக சமூக-பொருளாதார அமைப்புகளில் நன்மை, தீமை ஆகிய இரண்டுமே கலந்து காணப்படும். அதில் எதனை எது விஞ்சும் என்பது எதிர்வரும் தலைமுறையினருக்கே புலப்படும். அப்போது. அது காலம் கடந்த விடயமாகவும் வெளிப்படலாம்.

குறையும் மக்கள் தொகை தற்போதைய பொருளாதாரச் சூழலில் வரவேற்கப்பட வேண்டிய விடயம் என்று கருதுவோர் உள்ளனர். நாட்டின் பொருளாதார வளங்களில் பங்கு கேட்போரின் எண்ணிக்கை ஒருவாறாக குறையும் என்று அவர்கள் கூறுவார்கள். இதுவும் ஒரு பொருளாதாரச் சித்தாந்தமே.



### செலவு செய்யாத பணம்

அதாவது, மக்கள் தொகை குறைந்தால், உணவு, உடை மற்றும் வீடு ஆகிய மக்களின் அடிப்படை தேவைகள் தேசிய அளவில் குறையும் வாய்ப்பு உள்ளது. செலவு செய்யப்படாத பணம் சேமிக்கப்பட்ட பணம் என்ற பொருளாதாரத் தத்துவத்தின் அடிப்படையில், தேசிய அளவில் செலவினங்கள் குறையும் வாய்ப்பு உள்ளது. இதுஉதான் அந்த பொருளாதார சித்தாந்தம்.

தற்போதைய நிலவரப்படி, இலங்கை, அரிசி, கோதுமை, பால் பொருள்கள், ஏன் முட்டை மற்றும் சமையலுக்கு தேவையான மஞ்சள் வரையிலும் பெரிய அளவில் இறக்குமதி செய்கிறது. மக்கள்தொகை தொடர்ந்து குறைந்துவந்தால், இந்த பொருள்களின் இறக்குமதி கணிசமான அளவிற்கு குறையும் வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக, நாட்டின் அன்னிய செலவாணி தேவைகளும் வெகுவாக குறையலாம். 2022ஆம் ஆண்டு அரகலயா போராட்ட காலத்தில், நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைவதற்கு, அந்நிய செலவாணி கையிருப்பு வெகுவாக குறைந்ததும் ஒரு முக்கிய காரணமாகும்.

சொல்வது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால், மக்கள் தொகை வீழ்ச்சி அடைகிறது என்று கூறினால், ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தனது மாதாந்த வருமானத்தில் சிறிதாவது சேமிக்கலாம். அது குடும்பத்தின் எதிர்கால தேவைகளுக்குப் பயன்படும். அல்லது, தற்போதைய வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு சிறிதேனும் உபயோகமாக இருக்கும். அந்த சேமிப்பே கணிசமாக இருந்தால், பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை இன்னமும் நல்ல முறையில் கொடுக்கலாம்.

### செயற்கை நுண்ணறிவு

சரி, இவை எல்லாம், மக்கள் தொகை குறைவதன் பயன் என்றால். அதன் மறுபக்கம்தான் என்ன? ஒரு வசனம் சொல்வார்கள், எவ்வளவுதான் பணம் இருந்தாலும் மனித உதவிக்கு மனிதன்தான் தேவை. மெஷின்களை வைத்து எல்லாம் செய்துவிடமுடியாது என்று. இந்த இயந்திய யுகத்தில், ரோபோ மற்றும் செயற்கை நுண்ணறிவு காலத்தில், மனிதனின் பங்களிப்பு தேவையில்லை என்றோ, அல்லது குறைவாகவே தேவை என்றோ பேச்சுக்கு வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். ஆனால், உண்மை நிலை என்ன?

ரோபோ மற்றும் செயற்கை நுண்ணறிவு அதிகம் செயல்பாட்டிலும் பயன்பாட்டிலும் உள்ள மேலை நாடுகளின் தற்போதைய தலையாய பிரச்சினை களில் ஒன்று வேலை செய்ய ஆள் கிடைக்காமை. அது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு தொழிலிலும் வேறுவேறு வகையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆனால், மருத்துவர்கள், செவிலியர்கள் தொடங்கி, பல்வேற தரப்பட்ட பொறியாளர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், அலுவலர்கள் என்று பல தரப்பட்ட வேலைகளுக்கும் குறிப்பாக மேலை நாடுகளில் ஆள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள்.

இந்த நாடுகளில் எல்லாம், பின் வாசல் வழியாக, அரசியல் தஞ்சம் கோருபவர்கள் வெகுவாக வரவேற்கப்படுவதில்லை. ஆனால், அவர்களது தொழில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான தகுதி பெற்ற தொழிலாளர்கள் இரத்தினக் கம்பளம் விரித்து, முன் வாசல் வழியாகவே வரவேற்கப்படுகின்றனர்.

### கழுதை தேய்ந்து...

இங்கேதான் தமிழர்களுக்கான பிரச்சினையின் தொடக்கம். கடந்த மூன்று அல்லது நான்கு தசாம்சங்களாக இனப்பிரச்சினை, இனப்போர் மற்றும் தென்னிலங்கையின் பேரினவாதம் என்ற போர்வையில் மேலை நாடுகளுக்கு படையெடுத்தவர்கள் அனேகம் பேர். இது. 1956 'சிங்களம் மட்டும்' காலகட்டத்தில் தொடங்கியது.

அன்று, பிரித்தானியா, சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய இடங்களுக்கு குடிபெயர்ந்தவர்கள், கொழும்பு காலி திடலில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜகத்தையே காரணம் காட்டினார்கள். ஆனால், அந்த வன்முறை யாட்டம் அன்றைய காலகட்டத்தில் யாழ்பாணத்தில் இருந்தோரை எப்படி நேரடியாக நேரடியாக பாதித்தது என்பதற்கு விளக்கம் இல்லை.

அன்று வெளிநாடு சென்றவர்களில் பல தமிழ் இளைஞர்களும் நல்ல மாணவர்களாகவும் திகழ்ந்தனர். தாங்கள் புகலிடம் புகுந்த நாடுகளிலும் மெத்த படித்து, வாழ்க்கையில் உயர் நிலையை எட்டினார்கள். அவர்களை தொடர்ந்து, இனப்போர் தொடங்கிய காலகட்டத்தில், அன்றளவும் பாடசாலை கல்வி உயர்தரமாக இருந்த தமிழர் பகுதிகளில் இருந்து மேலை நாடுகளுக்கு பயணித்த மாணவ-மாணவியரும் அங்கு சிறப்பாக செயலாற்றினர், பின்னர் பணியாற்றினர். அவர்களும், அங்கேயே குடிபெயர்ந்து விட்டனர்.

ஆனால், பின்னர் வெளிநாடு தப்பிச்சென்ற இளைஞர்கள் பலரும் தென்னிலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி, பேரினவாத வன்முறை மற்றும் கட்டாயப்படுத்தி போருக்கு ஆளெடுத்த விடுதலை புலிகள் அமைப்பின் முடிவு ஆகியவற்றை மட்டுமே முக்கிய காரணங்களாக முன் வைத்தனர். தங்களது, கல்வித் திறனை மட்டுமே முன் வைத்து அந்த நாடுகளில் குடியுரிமை கோரும் நிலைமையில் அவர்கள் இருக்கவில்லை. இனப்போர் முடிந்த பின்னரும், கடந்த பதினான்கு ஆண்டுகளாக, நிலைமை, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான்.

### பன்மொழி புலமை

உண்மை உறைக்கும். தமிழர்களின் ஆங்கில அறிவை விட்டுத்தள்ளுங்கள். அது உடன் பிறந்தது எனலாம். ஆனால், அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்று, அங்கு பிரெஞ்ச், ஸ்பானிஷ், இத்தாலி, போன்ற மொழிகளைக் கற்றுத் தேர்ந்து, அவற்றில் சரளமாகப் பேச-எழுத தங்களை வருத்திக் கொண்டார்கள். அல்லது, பழகி கொண்டார்கள்.

இவ்வாறு, பன்மொழி புலமை இரத்தத்தில் ஊறிய ஓர் இனம், சிங்கள மொழியை மட்டும் கற்க மாட்டோம் என்று அடம் பிடித்து வந்தது, அவ்வாறே தற்போதும் தொடருவது, யானை தனது தலையிலேயே மண்ணை தூக்கி போட்டுக்கொள்வதற்குச் சமம்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# யானை தன் தலையிலேயே..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**மாறி யோசியுங்கள்...**

ஐம்பதில் 'சிங்களம் மட்டும்' காலம் தொடங்கி, தமிழ் மாணவர்களை அந்த மொழியைக் கற்பதற்கு தமிழ் சமூக -அரசியல் தலைமைகள் அனுமதித்து இருந்தால், ஊக்குவித்து இருந்தால், சிங்களப் பேரினவாதிகளை அவர்களது விளையாட்டில், அவர்கள் விதித்த விதிகளின்படி, தமிழ் இனம் தோற்கடித்திருக்கும். இன்று, சுதந்திரத்திற்கு முன்னிருந்த நிலைமையில் தமிழ் சமூகம் வேலை வாய்ப்பு மற்றும் சமூக அந்தஸ்தில் தொடர்ந்திருக்கும்.

குறிப்பாக, சிங்கள மொழி ஆளுமை பெற்றிருந்தால், இனப்போர் என்ற அழிவு பாதையில் தமிழ் இனம் பயணிப்பதற்கான கட்டாயம் அல்லது வாய்ப்பு அதீதமாக இருந்திருக்காது. மாறாக, தென்னிலங்கை, எழுபதுகளிலும் எண்பதுகளிலும் எதிர்கொண்ட ஜே.வி.பின் அரசுக்கான இரண்டு ஆயுதமேந்திய கிளர்ச்சிகளின் காலகட்டத்தில், தமிழர் தரப்பு தங்களது வாழ்க்கை முறை மற்றும் வாழ்வாதாரங்களை வளமாக்கிக் கொண்டிருக்கலாம்.



ஆனால், இதுதான் ஒட்டுமொத்த தலைவிதி என்று ஆன பிறகு, யாரைக் குறை கூறி என்ன பயன்? தற்போதும், பல்வேறு காலகட்டங்களில் தமிழ் தலைமைகளின் தவறுகளை சுட்டிக்காட்டினால், அதனை வைத்து அரசியல் செய்வோரே உள்ளிலும் வெளியிலும் இருக்கிறார்கள். அதிலிருந்து பாடம் கற்போர் எங்குமே இல்லை. என்ன, இப்போது சும்மா இருக்கிற சங்கை ஊதி, யாருக்கு என்ன பயன்?

**எதிர்கால சிந்தனை**

இந்தப் பின்னணியில், நாட்டின் மக்கள் தொகை மற்றும் பிறப்பு சதவீதம் குறைந்து வருவதை தமிழ் சமூகம் எப்படி பார்க்கிறது? அல்லது, பார்க்க வேண்டும்? இது குறித்த தகவலோ, அறிவோ அல்லது எதிர்காலம் குறித்த சிந்தனையோ இங்கிருக்கும் யாருக்குமே இல்லை என்பதே உண்மை. அப்படி இருக்கும்போது, அவர்கள் என்னதான் செய்துவிடப்போகிறார்கள்?

இனப்போர் காலகட்டத்தில் ஒரு பகடி வசனம் ஒரு சுற்று வந்தது. அதாவது, "இலங்கையை விட, கனடா நாட்டில். அதிலும் குறிப்பாக ரொரொன்டோ பகுதியில்தான் அதிக எண்ணிக்கையில் இலங்கை தமிழ் இன குழந்தைகள் பிறக்கிறார்கள்". இது இங்கிருந்து தப்பித்து கனடா போன்ற மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் குறித்த பொது-வான கருத்தாக இருந்தது.

இன்று, யாரும் இது குறித்துப் பேசுவதில்லை. காரணம் அந்த வசனத்தின் உண்மை தன்மை ஊறிவிட்டது. ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏதோ காரணத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், இன்று நிலைமை சீரடைந்த பின்னர், இங்கு ஒரு முறையோ, இரு முறையோ வந்து சென்றிருக்கலாம். ஆனால், இங்கு வந்து தங்கப்போவதில்லை.

அது போன்றே, தங்களது அந்த நாடுகளின் குடியுரிமையை கையளித்து விட்டு, இலங்கை குடியமையை மீளப்பெற்று, இங்கு வந்து தங்களது ஆயுள்காலம் முழுமைக்கும் தங்குவார்களா? அவ்வாறெல்லாம் புலம்பெயர்ந்தோர் செய்-யாமல், இங்குள்ள தங்களது தூரத்து உறவினர்களின் பிள்ளைகளையும் தங்கள் வசம் அழைத்துக்கொள்ள முயன்றால், அதன் விளைவு என்னவாக இருக்க முடியும்?

இனப்போர் காலகட்டத்தில், திருமணம் செய்துகொண்டு பிள்ளை-குட்டிகளோடு புதிய தலைமுறை எடுக்க வேண்டிய ஆண், பெண் என்ற இருபால் தமிழ் இளைஞர்களும் உயிரிழந்தனர். இதுவே. ஜே.வி.பி.ன் இரண்டு ஆயுத கிளர்ச்சி காலத்திலும் தென்னிலங்கையில் அரங்கேறியது. அதன் பலனையே நாடு இன்று, குறைந்து வரும் மக்கள் தொகை என்று அனுபவித்து வருகிறது.

தற்போது வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் தொகை, அதில் வயது வாரியான ஆண்-பெண்பாலினத்தவரின் எண்ணிக்கை, அவர்களின் வயது ஆகிய விவரங்கள், புதிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தெரியவரும். அதனை அடிப்படையாக வைத்து எதிர்வரும் தசாப்தங்களில் தமிழ் மக்களின் எண்ணிக்கை எத்தனை இருக்கும் என்று நிபுணர்களால் கணக்கிட்டுச் சொல்ல முடியும். அந்த எண்ணிக்கை தேசிய அளவில் குறைவாகவே இருக்கும் என்பதே கொழும்பு பல்கலை பேராசி-யரின் கணக்கு. அல்லது எச்சரிக்கை.

இன்று, அரசியல் அழிப்பு என்ற பெயரில், தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளில் பொருளாதார அகதிகளாக சென்று அங்கு சிறையில் வாடுவதையே பெருமையாக கருதுகின்றனர். அரகலயா போராட்டத்திற்கு பின்னர், தென்னிலங்கை சிங்களவர்களும் வெளிநாடுகளில் வேலை தேடி சென்று வருகின்றார்கள். வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஐந்து ஆண்டுகள் சம்பளம் இல்லாமல் லீவு கொடுக்கும் முறை உலகில் வேறு எந்த நாட்டிலாவது இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால், அவ்வாறு வேலை தேடி வெளிநாடு சென்றவர்கள் திரும்பி வந்தாலும் வராவிட்டாலும், இலங்கையில் சிங்கள மக்கள் தொகை சிறுபான்மையினரை விட குறைந்துவிடும் வாய்ப்பு உள்ளதாக எந்த வல்லுனரும் கணித்துக கூறவில்லை.

தமிழர்கள் பின் தங்கவில்லை என்றால், எதிர்காலச் சந்ததியினர் எண்ணிக்கையிலும், எண்ணத்திலும், பொருளாதரத்திலும் பெரிதும் பின் தங்கி, ஒரு கட்டத்தில் அடிமைகளாகவே மாறிவிடும் வாய்ப்பு உள்ளது. அதன் பிறகு, யாருக்காக அரசியல் தீர்வு?

இது குறித்து, தமிழர் தரப்பில் யாருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Paneer & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# மெய்ப்பொருள் காண்பதறிவு



இந்த உலகம் பொருள்களால் ஆனது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மைகள் உடையன. சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல்புடையன. சிலதனித்தன்மை பெற்றேவிளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன் தொடர்புடையது வாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதானும் ஒரு உறவு இல்லாமால் வாழ்க்கை அமை வதில்லை; அமையாது; அமைதல் முடியாது. அதனால் தான் திருக்குறள், 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றது.

பொருள்களால்ஆயதுவாழ்க்கை. இந்தப் பொருள்களை பொருளின் தன்மைகளை உள்ளவாறறிந்து அப்பொருள் தன்மைக்கு ஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும் பயன்படுத்த அறிந்து கொள்ள வேண்டும். பொருள்களின் தன்மையறிதலுக்குத் தனித்திறனும் பயிற்சியும், அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயேதொடர்ந்து இருப்பதில்லை. மாறும் தன்மை உடையன உண்டு. சில பொருள்கள் நிலையாயின போலத் தோன்றும்; பெயர் பெற்று விளங்கும்.

ஆனால் நிலையில்லாதவனாகிப் போதலும் உண்டு. சில நன்மை தருவது போலக் காட்டி துன்பம் தரும், சில துன்பம் தருவது போலக் காட்டி இன்பம் தரும். சான்றாகநமதுஉடலுக்குமெய்என்றுபெயர். அனால், இது உண்மையல்ல. காலத்தால் கேடுறுதலாம். சர்க்கரை இனிமையானது. சர்க்கரையால் விளைவது பெருந்துன்பம். வெந்தயம் கசப்பான பொருள். ஆனால் வாழ்க்கைக்கு நலம் தருவது; இன்பம் தருவது.

குளிர்ச்சியானவையாக இருப்பவை சூட்டையேதருகின்றன. சூடாக இருப்பவை குளிர்ச்சியையே தருகின்றது. ஆதலால் பொருளின் தோற்றம் பார்க்காமல் பொருளின் தன்மை, அப்பொருளால் விலையும் பயன் ஆகியன தெரிந்து அதற்கேற்பப் பயன்படுத்தல் வேண்டும். இத்தகு அறிவு சராசரி மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை.ஞானிகளுக்கேஉண்டு. சாதாரண மக்கள் தோற்றதால் கவர்ச்சிக் கப்படுவர். தற்காலிகமானவையாக இருப்பினும் உடனடியாக பலன்களை எதிர்பார்ப்பர். எப்பொருளையும் ஆழ்ந்து நோக்குவதில்லை. வேளாண்மைக்குப் பயன்படும்இரசாயனஉரங்கள்உரமேஇல்லை. இரசாயன உரங்கள் ஒருவகைத் தூண்டு சக்தியேயாகும். ஆனால் நமது மக்கள் இவைகளை உரம் என்று நம்பினார்கள்; இந்த உரத்தையே நம்பி



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் 120,000 முன்பள்ளி மாணவர்களுக்கும் காலை உணவை வழங்குவது சவாலாக அமைந்திருந்தது. அந்த வகையில் தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபா முதல் 100 ரூபா வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப் பாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக் கான உணவை வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

அதற்கமையவே நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும்காலைஉணவு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும்வகையில்திட்டத்தை செயற்படுத்தவுள்ளோம். தோட்ட பாடசாலைகள் தவிர்ந்த பாலர் பாடசாலைகளில் மட்டும் 120,000 மாணவர்கள்இருப்பதாகவும்தோட்ட பாலர் பாடசாலைகளிலிருக்கும் 35,000மாணவர்களும்உள்ளடங் களாக 155,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுவர்.

அதேபோல் கர்பிணித் தாய்மா ருக்கான போசாக்குப் பொதிகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம். அதற்காக 220,214 கர்பிணித் தாய்மாருக்கு 4,500 பெறுமதியான போசாக்கு பொதிகளை 10 மாதங்களுக்கு வழங்க எதிர்பார்த் திருக்கின்றோம்.

பாலர்பாடசாலைஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கபடவுள்ளது. நாட்டின்அனைத்துமாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பாலர் பருவகால மேம்பாடு தொடர்பிலான தேசிய செயலாளர் அலுவலகத்தின் கீழ்பதிவுசெய்யப்பட்டிருக்கும்18,333 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளனர்.

அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். பாலர் பாடசாலைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 2500 ரூபாயினை வழங்கவுள்ளோம். அது போதுமான தொகை இல்லை என்பதால் அதனை மேலும் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அமைச்சினால் மகளிர் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு 03 புதிய சட்டங்களை கொண்டுவரவுள்ளோம்.

அதற்கமைய, ஆண், பெண் சமத்துவ சட்டம் ஊடாக ஆண், பெண்சமத்துவத்தைபாதுகாக்கவும், டுபுடீவுஜஞ ஊடாக ஆண், பெண் சமூகசமத்துவத்தைநிலைப்படுத்தும் சபையொன்றை நிறுவி அதன் கீழ் சமூக சமத்துவ மத்தியஸ்த அதிகாரிகளின் என்ற அரச நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல்பெண்கள்வெளிநாடு செல்லும்போதுகுழந்தையின்வயது குறைந்தபட்சம் 5 ஆக கருத்தில் கொள்ளப்படும். 05 வயதுக்கு குறைவான குழந்தைகளிருக்கும் எத்தனை தாய்மார் வெளிநாடுக ளுக்குச் சென்றுள்ளனர் என்பது தொடர்பிலான தகவல்களை பிரதேச செயலக மட்டத்தில் தேடிய றிவிருக்கின்றோம்.

அதேபோல்மாகாணஆளுநர்கள், போக்குவரத்து அமைச்சர், தேசிய போக்குவரத்துஆணைக்குழுவிற்கும் அறிவித்து மாகாண போக்குவரத்து அதிகாரசபையின்கீழ்போக்குவரத்து

தொடர்ச்சி 10ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் கௌசல்ய?

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2024 - 2025ஆம் ஆண்டுக்கான தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை சங்கத்தின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌஸ்ய நவரட்ண தலைமைப்பதவிக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அதேநேரம், செயலாளர் பதவிக்கு சட்டத்தரணி சத்துர கல்ஹேன வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார்.


இந்த தெரிவுக்கான தேர்தல் அதிகாரியாக அலுவலராக சொலிஸ்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி இந்திக தேமுனி டி சில்வா செயற்படவுள்ளார்.

இதேவேளை, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான அவகாசம் புதன்கிழமை மாலையில் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், வேறெந்த வேட்பு மனுக்களும் குறித்த பதவிக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்காத நிலையில், தற்போதைய நிருவாகத் தினரே ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(05)

# மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யான ஒன்றே

## மறுக்கிறார் சரத் பொன்சேகா



900 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு சமிந்த விஜேசிறி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததாகக் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. பணத்துக்காக அவர் அரசியல் செய்யவில்லை. சேறு பூசல்களுக்காகவே பொய்யானகுற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது சமிந்த விஜேசிறியின் பதவி விலகல் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய மஹிந்தானந்த அளுத்கமகே அவர் 900 லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு பதவி விலகியதாக குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து உரையாற்றுகையில் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியின் பதவி விலகல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசப்பட்டது. சமிந்த விஜயசிறியை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன். 900 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு அவர் பதவிவிலகியதாகக் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. அவர் பணத்துக்காக அரசியல் செய்யவில்லை.

நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் தொடர்பான குழுவின் விசாரணைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட அசௌகரியத்தால் அவர் பதவி விலகினார் என அறிய முடிகிறது. சமிந்த விஜேசிறி செல்வந்தர். குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் சாதாரண காரில் நாடாளுமன்றத்துக்கு வந்தார்கள். தற்போது அதி சொகுசு காரில் செல்கிறார்கள். ஆனால் சமிந்த விஜயசிறி அவ்வாறு அல்லர். ஆரம்பத்தில் எவ்வாறு நாடாளுமன்றத்துக்கு வந்தாரோ, அவ்வாறே சென்றுள்ளார். சமிந்த விஜயசிறிக்கு அடுத்து நாடாளுமன்றத்துக்கு வருகை தரவுள்ளவர் இரட்டை குடியுரிமை உள்ளவர் என்று குறிப்பிடப்படுகின்றமை பிறிதொரு பொய். அந்த நபருக்கு ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடம் உள்ளது. இரட்டைகுடியுரிமை இல்லை. அவர் இலங்கை பிரஜை. ஆகவே சேறு பூசல்களுக்காகவே பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. - என்றார்.(05)

# விவசாயத்துறை மறுமலர்ச்சியை நாட்டில் ஏற்படுத்த நடவடிக்கை




நாட்டில் விவசாயத் துறையின்மறுமலர்ச்சியைத் தொடர்வதற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மை மற்றும் கமத்தொழில்அமைச்சு ஆகியன பங்குதாரர்களாகின்றன.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மையினூடாக இலங்கை கமத்தொழில் அமைச்சுடன் இணைந்து 9.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்துவதன்மூலம் நெல் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், குறுநிலத்தில் பயிர்களைபல்வகைப்படுத்துதல் மற்றும் நிலையான விவசாய முறைகளை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

அம்பாந்தோட்டை, வவுனியா, அனுராதபுரம்மற்றும்குருணாகல் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 10,000 விவசாயிகள் பயனடையும் வகையில் சிறிய நெல் விவசாயிகளுக்கு ஆதரவாக யுஎஸ்எயிட் நான்கு வருடங்களுக்கு நிதியளிக்கிறது.

எவ்.ஏ.கியு மற்றும் அமைச்சு ஆகியவை விவசாயிகளுக்கு 1,250 ஹெக்டேர் நெல் நிலங்களைசிறுபோகப் பயிர்ச்செய்கை காலத்தில் பயன்படுத்தி பொருத்தமான பயிர்களை விளைவிக்க உதவும்.

அதற்கு மேலதிகமாக 5,000 ஏக்கர் நெற்பயிர்களில் விவசாயிகள் நீர் மற்றும் உரம் போன்ற வளங்களை மிகவும் விளைதிறனாகப் பயன்படுத்த இந்த நடவடிக்கை உதவும். உரிய நேரத்தில் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு பொருள்கள் மற்றும் இயந்திரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக நெறிப்படுத்தப்பட்ட விநியோகச் சங்கிலிகளை நிறுவவும் இந்த நிதி உதவும்.

2022 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் நன்கொடையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நாட்டின் பொருளாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியின் போது எவ்.ஏ.கியு மற்றும்அமைச்சு ஒரு மில்லியனுக்கும் அதிகமான விவசாயிகளுக்கு 36,000 மெற்றிக் தொன் டிரிபிள் சூப்பர் பொசுபேற்று மற்றும் 9,800 மெட்ரிக் தொன் யூரியாவினை விநியோகித்தது.

இத்துறை புத்துயிர் பெறுவதற்கான அர்ப்பணிப்பிற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்த கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர,

'கடந்த சில வருடங்களாக எமது நெல் விவசாயிகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளனர்' எனவும் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையின் போது 'யுஎஸ்எயிட் மற்றும் எவ்.ஏ.கியு ஆகியன நாட்டின் ஒரு மில்லியனுக்கும் அதிகமான விவசாயிகளுக்கு அத்தியாவசிய உரங்களை இலவசமாக வழங்கியதோடு இந்த முயற்சியானது இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நெல் விவசாயிகளுக்கு தொடர்ந்து வருமானத்தை அதிகரிப்பதை உறுதி செய்வதற்கான ஆதரவை வழங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

'குயுமு மற்றும் கமத்தொழில் அமைச்சுடனானஎங்கள்கூட்டாண்மையைதொடர்வதில்ருளுயுஜனுபெருமிதம் கொள்கிறது என ருளுயுஜனு இன் தூதரகப் பணிப்பாளர் கிராவ் கூறினார்.

(05)

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைவருமே இணைக

## வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அழைப்பு



நாடு கண்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், இதற்கான திட்டங்களைஜனாதிபதிவகுத்துள்ளார் எனவும்வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

தற்போது நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள இந்த வேலைத் திட்டங்களுக்கு ஆளும், எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இன்றி, அனைவரும் கரம்கோர்த்து செயற்படவேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பிரச்சினைகளைவைத்து,அரசியல்செய்வதென்பது இலகுவானவிடயம்என்றும்அந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதே கடினமான விடயம் என்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டங்களையே அரசாங்கம் தற்போது முன்னெடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் -

எமது நாடு 2020 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாகஅடுத்தடுத்துஇரண்டுபிரச்சினைகளைச் சந்தித்தன. முதலாவது, நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று. கொவிட் தொற்றிலிருந்து ஓரளவு மீண்டுவந்தபோது, மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் இவ்வாறான இரண்டு சவால்களை நாம் எதிர்கொண்டோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தால் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தற்போது நாம் ஓரளவு மீள் எழுந்து வருகின்றோம். என்றாலும் அது முழுமை பெறவில்லை. அது முழுமை பெற வேண்டுமாயின் நாம் இன்னும் கடுமையாக செயற்பட வேண்டும். அதற்காக ஜனாதிபதி பல திட்டங்களை வகுத்திருக்கின்றார். அரசாங்கம் என்ற வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும் மக்களின் வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட வேண்டும். ஒரு மரத்தை ஒரே நாளில் வெட்ட முடியும். ஆனால் அந்த மரத்தை உருவாக்க பல வருடங்கள் தேவைப்படும். அதேபோன்றுதான் இந்த நாடு பொருளாதார ரீதியில் பாரிய வீழ்ச்சியைக் கண்டது. எனவே அதனை மீட்டெடுக்க காலம் தேவைப்படுகின்றது. ஒரே நாளில் ஒரு மரத்தை நட்டு ஒரே நாளில் அதன் பலனைப் பெற முடியாது. ஏதோ ஒரு வகையில் கடந்த 74 வருடங்களாக இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் விட்ட பிழைகள் மற்றும் தூர நோக்கற்ற சிந்தனை உண்மையில் இந்த நாடு மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்றது.

ஆகவே இந்த நேரத்திலே ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற பாகுபாடுகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இந்த நாட்டு மக்களுக்கான சேவையை, குறிப்பாக வாழ்க்கைச் சுமையைக் குறைக்கக்கூடிய விடயங்களை முன்னெடுக்கவும் நாட்டை மீட்டெடுக்கவும் நாங்கள் அனைவரும் கரம்கோர்த்து செயற்படவேண்டும். அதற்கான காத்திரபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் செயற்படுத்திக்கொண்டு வருகின்றது. அவ்வாறான நடவடிக்கைகள் எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் இன்னும் அதிகமாக முன்னெடுக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதென்பது இலகுவான விடயம். அதனை எல்லோராலும் செய்ய முடியும்.ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது என்பது தான் கடினமான விடயம். ஆகவே நாம் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்து வருகின்றோம்.

எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களைப் பொருத்தமட்டில் உரிமை என்பது ஒரு கண்ணாக இருந்தால் அபிவிருத்தி என்பது மறு கண்ணாக இருக்க வேண்டும்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தி சார்ந்த அரசியலைக் கட்டமைப்பதன் ஊடாக மாத்திரம் தான் எமது சமூகத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த அடிப்படையிலேயே இந்த நாட்டில் ஏனைய சமூகங்களும் பயணிக்கின்றன.

எனவே நாமும் அவ்வாறு உரிமை மற்றும் அபிவிருத்தி என்ற இரண்டையும் ஒருசேர முன்னெடுத்துச் செல்ல வேண்டும். - என்று வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மேலும் தெரிவித்தார்.

(05)

# ஜப்பானிய நிதியமைச்சர் மற்றும் தூதுக்குழு இலங்கைக்கு வருகை

ஜப்பானிய நிதியமைச்சர் சுசுகி ஷூனிச்சி மற்றும் தூதுக்குழுவினர் நேற்று(வியாழக்கிழமை) பிற்பகல் இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.



மேலும் ஜப்பான் நிதி அமைச்சர் மற்றும் தூதுக்குழுவினர் இலங்கையில் நாடாளுமன்றம், ஜயவர்தன மையம், ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, கப்பல்துறை மற்றும் மஹரகமவில் உள்ள லங்கா நிப்பான் பிஸ்டெக்நிறுவனம்ஆகியஇடங்களுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இரு நாட்டு கொள்கை திட்டத்தை சாத்தியமாக்க ஜனாதிபதி தயார்

பாலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காணும் இரு நாட்டு கொள்கைத் திட்டத்தை சாத்தியமாக்க இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 தூதுவர்களுடன் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றில் ஈடுபட்டார்.

இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் தலைமையில், எகிப்து, கடார், ஐக்கிய அரபு இராச்சியம், லிபியா, ஈரான், குவைத், சவூதி அரேபியா, ஓமான் மற்றும் ஈராக் உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, நிலையானதும் செயலூக்கமானதுமான பாலஸ்தீன அரசாங்கத்தை நிறுவி, தஞ்சம் புகுந்திருப்பவர்களை நிரந்தரமாக குடியமர்த்த அவசியமான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஒரு நாட்டை நிறுவி இரு நாடுகளுக்கு தீர்வு வழங்க முடியாதெனவும், ஹமாஸ் அமைப்பின் பயங்கரவாதத்தாக்குதல்மற்றும்காசாஎல்லைகளில் மீதான தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல்களை நியாயப்படுத்தகூடாதெனவும்ஜனாதிபதிவலியுறுத்தினார்.

மேலும்காசாஎல்லைபகுதிகளுக்குஇலங்கையின் உதவிகளை வழங்கவிருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அப்பகுதிக்கான மனிதாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதேபோல் செங்கடலின் பாதுகாப்பு முயற்சிகள் தொடர்பாக வலியுறுத்திய ஜனாதிபதி, இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் கடல்வழி போக்குவரத்தில் இருக்க வேண்டிய சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே இலங்கை மேற்படி முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதன்போதுமேற்குலகநாடுகளுடன்காணப்படும் தொடர்புகளுக்கு மேலதிகமாக ஆசியா, மேற்கு ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு உள்ளிட்ட வலயங்களுடனான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள இலங்கை எதிர்பார்த்திருப்பதாகத் தெரி வித்த ஜனாதிபதி, இலங்கையின் விரிவான வெளியுறவுக் கொள்கை குறித்தும் கருத்துத் தெரிவித்தார். (05)

# முக்கிய கடத்தல்காரர்களை உடன் கைது செய்யுங்கள்

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் யுக்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில், பிரதான கடத்தல் காரர்களை கைது செய்து உண்மையான போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

போதைப்பொருள் கடத்தலை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பிரதான நபர்களை கைது செய்ய வேண்டும்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை உரிய முறையில் முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் ஈடுபடும் பஸ்களில் பொருத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல்பொதுபோக்குவரத்து சேவைகளுக்குள் பெண்கள் முகம் கொடுக்கும்நெருக்கடிகளை ஓரளவு தடுக்கும் எதிர்பார்ப்புடனேயே கமராக்களை பொருத்த எதிர்பார்த்திருக்கின்றோம். அதற்காக பொதுபோக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் கமராக்களை பொருத்த வேண்டியது அவசியம் என்ற நிபந்தனையுடன் அனுமதி பத்திரங்கைளைப்பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## வைத்தியர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியாயப்பாட்டுடன் நாங்கள் முரண்படவில்லை.

ஆனால், மருத்துவத்துறையின் மற்றொரு பிரிவினருக்கான நியாயம் மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அரசாங்கம் பக்கம் சார்ந்து செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

அரசகுடும்பசுகாதாரசேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவிக்கையில், தற்போது அரச குடும்ப சுகாதார சேவைகள் அதிகாரிகளுக்கு கிலோமீற்றர் ஒன்றுக்கு இரண்டு ரூபாவே கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. எமக்கான நியாயமான கொடுப்பனவு எங்கே.

நாம் வைத்தியத்துறையில் சிறு பிரிவினர் என்பதாலா அல்லது நாம் குடும்பசுகாதார உத்தியோகத்தர்கள் என்பதாலா இந்தக் கொடுப்பனவுகள் எமக்கு மறுக்கப்படுகின்றன என்ற கேள்வியைத் தொடுக்கின்றோம் என்றார்.

அரச தாதியர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுதத் ஜயசிறி தெரிவிக்கையில், நான் நினைக்கின்றேன் தற்போதைய தொழிற்சங்கப்போராட்டமானதுதீர்வு கிடைக்கும்வரையில்தொடருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

எமக்குகலந்துரையாடலுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தக் கலந்துரையாடலில் எவ்விதமான நியாயமும் கிடைக்கவில்லை. அதுவொரு தோல்வி அடைந்த கலந்துரையாடலாகும் என்றார்.

## அடுத்துவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்பு உரையாற்றிய பேச்சாளர் குறிப்பிட்டதுபோன்று, சீனசந்தை இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளது. அவர்களுக்கு இன்னும் சென்சென் ஆபரண சங்கம் மட்டுமே உள்ளது. 1979இல்நான்சென்சென் நகருக்குச் சென்றபோது அங்கே ஒரு நெல் வயல்தான் இருந்தது. ஆனால் இன்று அது மிகவும் மாறுபட்ட பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது.

அதேசமயம்நாம்கற்றுக்கொள்ளநிறைய இருக்கிறது. இரத்தினக்கற்களைமீள்ஏற்றுமதி செய்தல் மற்றும் இரத்தினக்கற்களுக்கு பெறுமதி சேர்ப்பது போன்ற விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இரத்தினங்கள் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். இரத்தினக்கல்தொழிலை நவீனப்படுத்த வேண்டும். மேலும் இந்தத் தொழிலில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

நாம்வரிச்சலுகைகேட்டுப்பழகிவிட்டோம். ஆனால், அந்தச் சலுகைகளை எல்லாம் கொடுத்துவிட்டு, இந்தத் துறையில் இருந்து ஒரு பில்லியன் கூட சம்பாதிக்க முடியாது. அதாவது சலுகை வழங்குவது தோல்வியடைந்துள்ளது.

அப்படியானால், சலுகைகள் கொடுக்கும் அதேவேளை இத்தொழிலை மேம்படுத்துவதுதான் செய்ய வேண்டும். இத்துறையில் உள்ள அனைவரும் பொருளாதாரரீதியாகவலுப்பெறவேண்டும். அத்துடன் இரத்தினக்கல் பட்டைதீட்டும் தொழிலில் ஈடுபடுபவர்களின் திறனை மேம்படுத்த வேண்டும்.

பணத்தை தங்கள் பாக்கெட்டுகளில் போடுவதற்காக வரி விலக்கு அளிக்கும் திட்டத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் தொழிலை பாரியளவில் முன்னேற்றவேண்டும்என்பதே எனது நோக்கம்.

குறிப்பாக பேருவளை, இரத்தினபுரி, லக்கல போன்ற பிரதேசங்களில் உள்ள அனைவரும் பயன்பெற வேண்டும். நாட்டுக்கும், தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இதனால் பயன்கிடைக்க வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. எங்களிடம் எரிபொருள் இருக்கவில்லை. உரம் இருக்கவில்லை. உணவு கிடைப்பதுசிரமமாகஇருந்தது. 10 முதல் 12 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தற்போது அனைத்தையும்நாம்மக்களிடம் மீளக் கொடுத்துள்ளோம். இப்போது அந்நியச் செலாவணி இருப்பதால், அதைச் செய்ய முடிகிறது.

இந்தஅன்னியச்செலாவணி நமது ஏற்றுமதி மூலம் பெறப்படுவதில்லை. உலக வங்கி போன்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து அவற்றைப்பெற்றோம். 2022இல் எங்களுக்கு தேவையான உரத்தை அமெரிக்க அரசுதான் எமக்கு வழங்கியது.

ஆனால்எப்போதும்எமக்கு இதில் தங்கியிருக்க முடியாது. ஏனையநாடுகளிடம்எப்போதும் உதவி கேட்க முடியாது. நமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டும். அதற்கு நாட்டின் பொருளாதாரம் தயார் படுத்தப்பட வேண்டும்.

வாக்குறுதிகளை அளித்து இவற்றைச் செய்ய முடியாது. அந்நியச் செலாவணியை ஈட்டும் புதிய பொருளாதாரம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அது ஏற்றுமதி பொருளாதாரமாக இருக்க வேண்டும். இந்த சிறிய பிரதேசத்தில் இருந்து அதிக வருமானம் ஈட்டும் திறன் எமக்கு உள்ளது, ஒருபுறம் இரத்தினக்கல் தொழில் மூலம் வருமானம் கிடைக்கிறது.

சுற்றுலாத்துறை மூலம் வருமானம் ஈட்ட வாய்ப்பு உள்ளது. ஒருபுறம்பேருவளை, அளுத்கம தொடக்கம் காலி வரையில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. இது உலகத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் நகரம். மற்றும் உலகத்துடன் போட்டியிடும் நகரம். நமது நாட்டின் ஏனைய பகுதிகளும் இப்படித்தான் திட்டமிடப்பட வேண்டும்.

நாம் ஒரு நாடாக முன்னேறுவதாக இருந்தால், நமது முயற்சியின் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டும். யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்ல முடியும். ஆனால் பெறுபேறுகள் கிடைக்க வேண்டும். இந்த ஆண்டு 2சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும். இது சிறிய வீதம் என்றாலும், கடந்த ஆண்டு இந்த நாட்டின் பொருளாதாரம் மறை 7சதவீதமாக சரிந்திருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் இப்போது படிப்படியாக முன்னேறி வருகிறோம். 2025 ஆம் ஆண்டில், அந்த பொருளாதார வளர்ச்சியை 5சதவீதமாக அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். அதன்பிறகு, 7சதவீதம்-8சதவீதமாகபொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு முன்னேற வேண்டும். இவ்வாறு செயல்பட்டால் 05 வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

இன்று, நாட்டின் அனைத்து குடிமக்களும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைஎதிர்கொண்டுள்ளனர். நாம் அனைவரும் நாட் டின் உண்மையான நிலைமையை புரிந்து கொண்டு முன்னேறினால் 02வருடங்களின் பின்னர் இந்நிலையிலிருந்து விடுபட முடியும் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு கட்டியெழுப்பப்படும் இந்நாட்டின்எதிர்காலத்தினால்நன்மை கிடைக்கப் போவது எனக்கல்ல. அந்த நன்மை இந்நாட்டு இளைஞர் சமூகத்திற்கே செல்கிறது. அந்த இளம் சமூகத்தின் எதிர்காலத்திற்காக சிறந்த பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
DOWNLOAD PASSENGER APP
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 0706563213
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

# உண்மை நல்லிணக்க செயலகம் குறித்து கிழக்கில் கருத்துக்களைக் கேட்டறிந்தது

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகம் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பொது மக்களின் கருத்தறியும் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்தது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிலையான கட்டமைப்பை உருவாக்குவதற்கான தெளிவு மற்றும் பரிந்துரைகளைச் சேகரிக்கும் நோக்கத்துடன் இந்த கருத்தறிதல் நடத்தப்படுகிறது.

கிழக்குமாகாணநிகழ்ச்சியின்முதல்கட்டம் திருகோணமலையில் நடைபெற்றதோடு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நொயெல் இமானுவெல் ஆண்டகை, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக பிரதானி பேராசிரியர் வதினி தேவதாசன் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள், திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமிந்த ஹெட்டியாராச்சி, கலாநிதி இராமநாத் ஸ்ரீஞானேஸ்வரன் மற்றும் மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மூதூர் சந்தோசபுரத்தில் உள்ள ஆதிவாசி மக்கள் உட்பட பல முக்கிய தரப்பினர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன.

இதனையடுத்து, உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலக உறுப்பினர்கள் மட்டக்களப்பில் கருத்தறியும் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியதுடன், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே. ஜே. முரளிதரன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி பிரபாகரன் உள்ளிட்ட பீடாதிபதிகள் கல்விசார் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் , மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக தலைவர் எஸ்.மாமாங்கராஜா, காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் உள்ளிட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலக குழுவினர், கல்முனை பிரதேசத்திற்குச் சென்று கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டீ.ஜே. அதிசயராஜா மற்றும் பல சிவில் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள்,தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ஏ . றமீஸ் உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதேச சிவில் சமூக அமைப்புகள் பலவற்றின் உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான இடைக்கால செயலகத்தின் கிழக்கு மாகாண வேலைத்திட்டம், அம்பாறை பொத்துவில் முகுது மகாவிகாரையில் விகாரை விகாராதிபதி வண. வரகாபொல இந்திரசிறி தேரருடனான கலந்துரையாடலின் பின்னர் நிறைவுற்றது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவுவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், உத்தேச ஆணைக்குழுவிற்கான அடித்தளத்தை அமைப்பதில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகத்தின் பங்கு, 2024 ஜனவரி 2 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச சட்டம் மற்றும் உத்தேச பொறிமுறையின் முக்கிய அம்சங்கள் உள்ளிட்ட குறித்த பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் கருத்துக்கள் என்பன இந்த கலந்துரையாடல்களின் போது பெறப்பட்டன.

1983 முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான உத்தேச சட்டமூலத்தின் நோக்கம் தொடர்பில், உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகத்தின் குழு தெளிவுபடுத்தியது. இந்த சட்டமூலத்தை மீளாய்வு செய்து அவர்களின் கருத்துக்களையும் இதற்காக சமர்ப்பிக்குமாறு பங்குதாரர்களிடம் இடைக்கால குழு கோரியது.

குறித்த வரைவைத் தயாரிக்கும் போது அவர்கள் முன்வைத்த பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படும் என்றும் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அத்துடன், இந்த கலந்துரையாடல்களின் போது முன்வைக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலக குழு தெரிவித்தது.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவங்ச மற்றும் அதன் கொள்கை தொடர்பான பிரதானி கலாநிதி யுவி தங்கராஜா, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (கொள்கை) அசீப் புவாட், நிறைவேற்று அதிகாரி (பொதுமக்கள் தொடர்பு) தினுஷி டி சில்வா, நிறைவேற்று அதிகாரி (பொதுமக்கள் தொடர்பு ) சௌம்ய விக்ரமசிங்க, நிறைவேற்று அதிகாரி (தகவல் தொழில்நுட்பம்) சரித் பெர்னாண்டோ மற்றும் இணைப்பாளர் சரத் கொத்தலாவல உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

# அரசின் வருமான வரி அறவீடு வயது அடிப்படையில் கூடாது

## காமினி வலேகொட



வயது அடிப்படையில் வருமான வரி அறவிட முடியாது வருமானத்தின் அடிப்படையில் வரி அறவிடப்பட வேண்டும் என தேசிய வரி வருமானச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு மாற்றீடாக நிதியமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானியை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினால் இதுவரை பதிவு செய்யப்பட்ட வரி இலக்கங்கள் இரத்தாகும் நிலை ஏற்படும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் காமினி வலேகொட தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துக்கு அமைய 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் பதிவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி வெளியிடப்பட்டுள்ளார்.

தேசிய வரி வருமான சட்டத்தின் 102 (1) மற்றும் 126(1) உறுப்புரிமைகளுக்கு அமைய வயது அடிப்படையில் வரி அறவிட முடியாது. வருமானத்தின் அடிப்படையில் தான் வரி அறவிடப்பட வேண்டும்.

வருடாந்தம் 12 லட்சத்துக்கும் அதிகமான வருமானம் பெறுவோரிடமிருந்து வருமான வரியை அறவிட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாக நிதியமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

தேசிய வரி வருமான சட்டத்துக்கு அமைய வரி செலுத்துவோரை வேறுப்படுத்தும் அதிகாரம் நிதியமைச்சருக்கும், நிதியமைச்சின் செயலாளருக்கும் வழங்கப்படவில்லை.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் பதிவு தொடர்பில் நிதியமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை தேசிய வரி வருமானச் சட்டத்துக்கு முரணானது.

ஆகவே இந்த வர்த்தமானியை எவரேனும் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினால் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வரி வருமான இலக்கங்களை இரத்து செய்ய நேரிடும், எதிர்கால வரி இலக்க பதிவுகளுக்கும் பாதிப்பு ஏற்படும்.

நடைமுறையில் வரி வலையமைப்பு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே, தேசிய வரி வருமான சட்டத்தை திருத்தம் செய்து முறையான வழிமுறைகளுக்கு அமைய வரி செலுத்துவோர் தொடர்பில் பதிவுகளை முன்னெடுக்க வேண்டும். - என்றார். (05)

# 'நான் ஒஸ்டின்' புத்தகம் ரணிலிடம் கையளிப்பு

முன்னாள் ஜனாதிபதி செயலாளரான ஒஸ்டின் பெர்னாண்டோவால் எழுதப்பட்ட 'நான் ஒஸ்டின்' என்ற புத்தகம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இந்த சுயசரிதை புத்தகத்தில் அரச சேவை மற்றும் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் தீர்க்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

சமகால இலங்கை வரலாற்றில் சிக்கலான காலப்பகுதியில் பணியாற்றிய ஒஸ்டின் பெர்னாண்டோ, போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த 2001-2003 காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் 2017-2018 களில் ஜனாதிபதியின் செயலாளராகவும் பதவி வகித்தார்.

அரச சேவையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ள அவர் தனியார் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பணிகளில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக அரசியல் வரலாற்றில் சர்ச்சைக்குரிய நிகழ்வுகளின் வாழ்நாள் சாட்சியாளராகவும் உள்ளார்.

ஊடகங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ ஆவணப்படுத்தப்படாத இலங்கை அரசியல் மற்றும் நிர்வாகத் துறைபற்றிய உண்மைத் தகவல்களை இந்த புத்தகம் கூறுகிறது. அதன் மூலம், அரசாங்கம் மற்றும் இராஜதந்திரிகள் குறித்தும் சமூகத்தில் மறைந்துள்ள மனித இயல்புகளின் சிறப்பு, பலவீனம் மற்றும் சிக்கல்களையும் வாசகர் அறிந்து கொள்ளலாம்.

'நான் ஒஸ்டின்' சுயசரிதையாக மாத்திரமின்றி காலோசிதமான சமூக கலந்துரையாடலாகவும் அமைந்துள்ளது.

(05)

# பொருள்களின் விலை அதிகரிப்பு குறித்து அரசு சந்தைக்கு சென்று ஆராய வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



எந்தவித மதிப்பீட்டு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமலே அரசாங்கம் வற்வரி அதிகரிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இது பாரதூரமான பிரச்சினையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கம் வற்வரியை நூற்றுக்கு 18 வீதத்தால் அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அரசாங்கத்துக்கு முறையாக பதில் தெரிவிக்காமல் இருக்கிறது.

ஏனெனில் வற்வரி அதிகரிப்பு மேற்கொள்ளும்போது அதுதொடர்பாக எந்த மதிப்பீட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளாமலே இதனை அரசாங்கம் செய்திருக்கிறது.

வற்வரியை அதிகரித்த பிறகு இதுபோன்ற கணக்கெடுப்பை மேற்கொள்வது கடும் பிரச்சினைக்குரிய விடயமாகும். வற்வரி அதிகரிப்பதற்கு முன்னர் இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக மதிப்பிட்டு ஆராய்ந்த பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வற்வரி உயர்வால் கிராமப்புற,நகர்ப்புற மற்றும் தோட்டப்புற சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசாங்கம் தற்போது கணக்கெடுப்பு நடத்துவது ஆச்சரியமாக உள்ளது. முறையான நிதி நிர்வாகத்தில் வரிகளை விதிக்கும் அல்லது அகற்றும் முன் நிதி தாக்க மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால் அர சாங்கம் இவ்வாறானதொன்றை முன்னெடுக்கவில்லை.

அத்துடன் வற்வரி அதிகரிக்கப்பட்டபோது பொருள்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் சந்தையில் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்துக்கு தெரியாமல் இருக்கிறது.

அதனால் சீனி,பருப்பு,மிளகாய்,கீரி சம்பா,சம்பா போன்றவற்றின் விலை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை சந்தைக்குச் சென்று ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார். (05)

# 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சமிந்த விஜேசிறி காட்டிக் கொடுத்தார்

## சாடுகின்றார் மஹிந்தானந்த

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுக்க 900 லட்சத்தை பெற்றுக்கொண்டு ஆஸ்திரேலியாவில் குடும்பத்துடன் வசிப்பதற்கு சமிந்த விஜேசிறி 225 உறுப்பினர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார்.

இவரின் கருத்துக்களால் மக்கள் பிரதிநிதிகள் மலினப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே விசேட கவனம் செலுத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

தனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை, வீதியில் செல்ல முடியவில்லை என்று குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி புதன்;கிழமை நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தார். எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நாங்கள் வீதியில் செல்கிறோம், மக்களைச் சந்திக்கிறோம். இவர் குறிப்பிட்ட விடயங்களை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் குறிப்பிட்ட கருத்துக்கள் ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மலினப்படுத்தும் வகையில் உள்ளது.

வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளவர் இரட்டை குடியுரிமையைக் கொண்டுள்ளார். 900 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு இவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுத்துள்ளார்.

இரட்டை குடியுரிமை உடையவர் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும், ஆஸ்திரேலியாவில் குடும்பத்துடன் வாழ்வதற்கும் இவர் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார். இவர் குறிப்பிட்ட கருத்துக்கள் பாரதூரமானவை. ஆகவே விசேட கவனம் செலுத்துங்கள். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசத்தால் நடத்தப்படும் பொதுஜனவாக்கெடுப்பு மூலமாகவே தமிழர்களுக்கான தீர்வை அடையமுடியும்

## வேலன் சுவாமிகள் நம்பிக்கை



வடக்குஇகிழக்கு மாகாணத்தில் சர்வ தேசத்தால் நடாத்தப்படுகின்ற பொது சனவாக்கெடுப்பின் மூலமாகத்தான் ஒரு தீர்வை அடையமுடியும் என வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

50ஆவது உலக தமிழராச்சி மாநாட்டில் படுகொலைசெய்யப்பட்ட 09 பேரது 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்திற்கு முன்பாக உள்ள நினைவாலயத்தில் புதன்கிழமை இடம்பெற்றது. நினைவேந்தலினை செலுத்திய பின் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழமானது தொடர்ச்சியாக இன வழிப்புக்கு உட்பட்டுவருகின்ற காரணத்திலே எங்களது இனத்துக்கு சிங்கள அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட கொடூரத்தை நினைவுகூருவது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. அனைவரும் ஓரணியாக திரண்டு நினைவேந்தலினை அனுஷ்டிக்கவேண்டும்.

இளம் சந்ததியினர்களிடம் நினைவேந்தலினை கடத்த வேண்டும். இனவழிப்பு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற தருணத்தில் 50 ஆவது ஆண்டிலே நான்கு அம்ச கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

01.வடக்கு கிழக்கு தாயகத்தில் தமிழர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கும் தருணத்தில் வடக்குஇ கிழக்கில் உள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்

02.இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும்

03.சர்வதேச நீதிமன்றத்திற்கு இனப் படுகொலையாளிகளை பரப்படுத்தவேண்டும்

04. ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினை வடக்குஇ கிழக்கு மாகாணத்தில் சர்வதேசத்தால் நடத்தப்படுகின்ற பொதுசன வாக்கெடுப்பின் மூலமாகத்தான் அடையமுடியும். - என்றார். (05)

# வெள்ளத்தில் சிக்கியோர் மரங்களிலிருந்து மீட்பு

## வெலிகந்தையில் சம்பவம்

வெலிகந்தை மொனரதென்ன பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய மூன்று வயது குழந்தை உட்பட 7 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என வெலிகந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு காப்பாற்றப்பட்டவர்கள் மொனரதென்ன பிரதேசத்தை சேர்ந்த 03இ 20இ 25இ 35 மற்றும் 40 வயதுடையவர்கள் ஆவர். இவர்கள் செவ்வாய்க்கிழமை தங்களது பயிர்களைக் காப்பதற்காக சென்றிருந்த நிலையில் மாதுரு ஓயா மற்றும் குடா ஓயா நீர்த்தேக்கங்கள் நிரம்பியதில் அப்பகுதியில் வெள்ளம் ஏற்றப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கியவர்கள் தங்களது பாதுகாப்பு நிமித்தம் மரங்களில் ஏறியுள்ளனர். இதனையடுத்து இவர்கள் படகுகள் மூலம் காப்பாற்றப்பட்டனர் என வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# வெளிநாட்டு ரின் மீன் இறக்குமதி நிறுத்தம்

உள்நாட்டு ரின் மீன் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் நேற்று(வியாழக்கிழமை) முதல் வெளிநாடுகளில் இருந்து ரின் மீன் இறக்குமதியை நிறுத்துமாறு கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்தவிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

ரின் மீன் உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் தேவானந்தாவிற்கும் இடையில் கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதுஇ ரின்; மீன் தொழில்துறை எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

கடந்த சில மாதங்களாக வெளிநாடுகளில் இருந்து சுமார் 8000 தொன் ரின் மீன்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் ரின் மீன்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முடியாமல் போனது முக்கிய பிரச்சினையாக சுட்டிக்காட்டப்பட்டது.

வெளிநாடுகளில்இருந்துஇறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களின் விலை குறைவடைந்துள்ளதாகவும்இ அரசாங்கம் விதித்துள்ள வற் மற்றும் செஸ் வரிகளால் இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களின் விலைக்கு தமது உற்பத்திகளை வழங்க முடியாதுள்ளதாகவும் அமைச்சரிடம் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்இ இன்று (நேற்று) முதல் ரின்மீன் இறக்குமதியைதற்காலிகமாக நிறுத்துவதற்குதேவையானநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியதுடன்இ தற்போதைக்கு மேலதிக கட்டணத்தை அறவிடுவது தொடர்பில் உரிய நடவடிக்கைகளைஆராயுமாறுஅமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (05)

# தரமற்ற தடுப்பூசிக் கொள்வனவு: 6 பேரின் விளக்கமறியலும் நீடிப்பு

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜானக சந்திரகுப்த மற்றும் ஏனைய சந்தேக நபர்களான 6 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியைக் கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளின்போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

# வெள்ள நீரில் மூழ்கியது தென்கிழக்கு பல்கலை

நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் நீரில் மூழ்கியுள்ளது.

இந்நிலையில் எதிர்காலத்தில் வெள்ள நீர் மேலும் அதிகரிக்கு அபாயம் இருப்பதால் முக்கிய ஆவணங்களையும் பல்கலைக்கழக சொத்துக்களையும் பாதுகாப்பாக அகற்றும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக ஊழியர்களும், இராணுவத்தினரும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (05)



# பல்வேறு கோரிக்கை முன்வைத்து சுகாதார ஊழியர்கள் போராட்டம்




முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பொது வைத்தியசாலைகளின் சுகாதார ஊழியர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றும் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அதன்படிமருத்துவசேவைகளுக்குவழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை ஏனைய சேவைகளுக்கும் வழங்குமாறு கோரி நாடளாவிய ரீதியில் இருக்கும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் சுகாதாரப் பணி உதவியாளர்கள் உள்ளிட்டவர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்களும் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசேவை ஸ்தம்பிதமடைந்ததோடு, வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளர்களும் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் இன்று காலை 8 மணி வரை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அநீதியான பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார ஊழியர்கள் குறிப்பிட்டுள்ளனர். (05)

# யுக்திய நடவடிக்கையில் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகள் குறித்து அமெரிக்கா கரிசனை

யுக்திய நடவடிக்கை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் மனித உரிமை ஆணைக்குழுவும் வெளியிட்டுள்ள கரிசனைகளை அமெரிக்காவும் பகிர்ந்துகொள்வதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சியின் கொள்கைகளை உரியநடைமுறைகளை பின்பற்றுவது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சமநிலையை பேணுவது நீதிக்கும் மக்களின் நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# கீரிச் சம்பா இறக்குமதியால் நெற்செய்கையாளர் பாதிப்பு



'இந்தியாவில் இருந்து கீரி சம்பா இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதால், தேசிய நெற்செய்கையாளர் கடும் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும்' எனநாடாளுமன்றஉறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

14 மாதங்களுக்கு தேவையான அரிசி இந்த போகத்தில் கிடைக்கும் என விவசாய அமைச்சரும்,விவசாய திணைக்களமும் தெரிவித்துள்ளன.

இவ்வாறு இருக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து கீரி சம்பா இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் தேசிய நெற்செய்கையாளர் கடும் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரியை கிலோவுக்கு 65 ரூபாயில் இருந்து 1 ரூபா வரை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதால்,பெரும் போகத்தில் நெல் விலை குறைவடைந்து நியாயமான விலைக்கு நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

வரி குறைப்பால் பாரிய அளவில் அரிசி தொழிற்சாலை உரிமையாளர்களே பலனை அடைவர். இதன் மூலம் நுகர்வோரும் விவசாயிகளுமே மிகவும் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். - இவ்வாறு தெரிவித்துள்ள

# சுற்றுலா கப்பலில் கடலுக்கு ஆய்விற்காகவே சென்றோம்

## இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர கூறுகிறார்

ஆய்வொன்றுக்காகவே சுற்றுலாக் கப்பலில் சென்றோம் என இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக விசேட செய்தியாளர் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் –

அகில இலங்கை தொழிற் சங்கத்தின் தலைவர் ஒருவர் இந்த விருந்துபசாரத்திற்கு 25 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இன்னொரு இடத்தில் கோடிக் கணக்கில் இதற்கு செலவிடப்பட்டதாகக் கூறப்பட்டது. எனது சொந்த செலவிலேயே இந்த விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறான பொய்யான தகவல்களால் தான், இந்த நாடு கடந்த காலங்களில் கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது.

இந்த விருந்துபசாரத்திற்கான அனைத்து பற்றுச் சீட்டுக்களும் என்னிடம் உள்ளன. சென்வீட்ஜ், கேக், ரோல்ஸ் இற்காக 14, 790 ரூபா எனது சொந்த நிதியில் செலவிடப்பட்டது.

அத்தோடு, நான் இன்பச் சுற்றுலாவாக அங்கு செல்லவில்லை. ஆய்வொன்றுக்காகவே சென்றோம்.

வரவு- செலவுத்திட்ட விவாதத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் துறைமுகத்தை பார்வையிட வேண்டும் என கடிதம் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இதனால்தான் நான் இந்த ஏற்பாடை செய்திருந்தேன். துறைமுகங்கள் மற்றும் கப்பற்போக்கு–வரரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடமும் இதற்காக நாம் அனுமதியை பெற்றிருந்தோம். இந்த நிலையில், உண்மைகளை மூடிமறைத்துதான், இந்த பொய்யான கதைகள் பரப்பப்படுகின்றன. - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நீர்க் கட்டன விலைச் சூத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



மின்கட்டணம்குறைக்கப்பட்டால்நீர் கட்டணத்தையும்குறைக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீர்க்கட்டணம் தொடர்பான விலைச் சூத்திரத்தை விரைவில் அறிமுகப்படுத்தஎதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும் தெரிவித்தார்.

மேலும்நீரை சுத்திகரிக்க மின்சாரம்முக்கியதேவையாகஇருப்பதால்,மின்கட்டணம் குறைக்கப்பட்டால் நிச்சயமாக நீர்க் கட்டணத்தைக் குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை அரசாங்கம் எடுத்துள்ளதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார். (05)

Tourism Northern Province
synamon global
தமிழ் 99.5 99.7
காலைக்கதிர்
BirdFather
IDEA FACTORY
happymarket.lk



THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# Jaffna International Trade Fair
# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

19 | 20 | 21

10.00 மு.ப - 8.00 பி.ப

**Muttraweli Grounds**
(Next to Jaffna Fort)

**முற்றவெளி மைதானம்**
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN | NIPPON CEMENT
MEDIA SPONSORS: PRINT | RADIO | TELEVISION Capital | DIGITAL
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

SILVER SPONSORS
Anchor | SOORYA | Hayleys Solar | 4ever | Darley Butler | Elephant House | KELLS KREST | PHOENIX | RHINO | Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com | www.jitf.lk | jitf.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2024இல் வெளியிடப்பெற்றது.